17.02.2025. S.C.No.14 of 2020 P.W.2 ( தேவி)

(A2 present. A1 absent and his absence condoned on S.317 of Cr.P.C.)

Crl.M.P.No. 169/2025 dated 31.05.2025 அ.சா.2 (தேவி) சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**2 வது எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் அவ்வாறு பார்த்திருந்தால் போலீசில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை பார்த்தேன். போலீசார் கேட்டுக்கொண்டதின் பெயரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அன்று வீட்டில் இருந்ததால்தான் சம்பவத்தை பார்த்தேன். 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பவும் இல்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேலும் 1ம் எதிரியின் தரப்பில் கேட்ட குறுக்கு விசாரணையை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்கிறார்.

**நீதிமன்றக் கேள்வி**

நீ.கே. சம்பவத்தை ஆரம்பிக்கும்போது பார்த்தேனா அல்லது இடையில் வந்து பார்த்தேனா என்றால்?

பதில்: சத்தம் கேட்டு வந்து பார்த்தேன்.

நீ.கே. எங்கிருந்து வந்து பார்த்தேன் என்றால்?

பதில்: வீட்டிற்குள்ளிருந்து வந்து பார்த்தேன்.

நீ.கே. அப்போது என்ன நடந்தது யார் என்ன செய்தார்கள்என்றால்?

பதில்: சூர்யாவை ரமேஸ் முதலில் வெட்டினார் அதன்பின்னர் ராஜா சூர்யாவை வெட்டினார்

நீ.கே. எங்கு வெட்டினார்கள் என்றால்?

பதில்: முதலில் தலையில் வெட்டினார்கள், பின்பு தொடையில் வெட்டினார்கள்.

நீ.கே. பிரச்சனை முடியும்வரையில் பார்த்தேனா அல்லது சென்றுவிட்டேனா என்றால்?

பதில்: மேலே நடந்த நிகழ்வுகளை பார்த்துவிட்டு பின்பு இரத்தத்தை பார்த்தவுடன் அதிர்ச்சியில் என் வீட்டிற்குள் சென்றுவிட்டேன்.

**மறுவிசாரணை – இல்லை.**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.17 19:01:59 +0530